Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை: ரூபா 5-00

Y.M.CA

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 23 [07-07-98] புதன்கிழமை ஓசை 139

## அத்தியாவசிய பொருள்களின் விலை மாற்றம் அறிவிப்பு

யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. கடந்த வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திலேயே இம் மாற்றத்திற்கான முடிவு எடுக்கப்பட்டது. இக் கூட்டத்தில் யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு பத்மநாதன், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு லிங்கநாதன், கூட்டுறவுச்சங்க பிரதிநிதி திரு. சூ சிறில் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்படி அதி உச்ச விற்பனை விலையாக மா 14 00ரூபா, சீனி 28 00ரூபா, அரிசி 17 00ரூபா, மைசூர் 55.00ரூபா, பயறு 27.00ரூபா, பெருஞ்சீரகம் 62.00 ரூபா, சின்னச்சீரகம் 180.00 ரூபா, வெந்தயம் 39.00ரூபா, மிளகு 80 00ரூபா, தேயிலை7.50 [100 கிராம் பைக்கட்], கைலன்பால்மா 45.00 ரூபா என்று தீர்மானிக்கப்பட்டது.

# சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்குள் விடுதலைப் புலிகள் இயக்கம் ஊடுருவல்!

## மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலை ஆசிரியர் குழு புரளி

"சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் நம்பகத்தன்மை சந்தேகத்துக்குரியதாகியுள்ளது. இக் குழுவில் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளனர். இதனால் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவை நாம் வேறு கோணத்தில் பார்க்க வேண்டியுள்ளது, சிறிலங்கா நெருக்கடி சம்பந்தமான பேச்சு வார்த்தைகளில் சர்வதேச செஞ்சிலுவைக் குழு ஒரு நேர்மையான தரகராக நடந்து கொள்ளும் என்ற உள்ளூர் சர்வதேச மட்டத்து எதிர்பார்ப்புகள் நம்பிக்கையற்றதாகி விட்டன." இவ்வாறு ஒரு புரளியை மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் அமைப்பு அறிக்கையொன்றில் வெளியிட்டுள்ளது. இநத அறிக்கை கொழும்பு ஒப்சோவர் பத்திரிகையில் முன் பக்கச் செய்தியாக வெளிவந்துள்ளது.

இனப் பிரச்சினையில் ஒரு தரப்பினரான விடுதலைப்புலிகள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவில் ஊடுருவி இருக்கும் போது பொறுப்புள்ள ஒரு சர்வதேச அமைப்பான செஞ்சிலுவைக் குழு எவ்வாறு நடுநிலைமையாக நடந்து கொள்ளும். விடுதலைப்புலிகள் சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவில் ஊடுருவியிருப்பதற்கும், இக் குழுவின் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பு யார்? அல்லது சர்வதேச செஞ்சிலுவைக்குழு ஆரம்பம் முதலே பாரபட்சமாக நடந்துள்ளதா? இந்த விளககங்களுக்குப் பதில்சொன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'றுகுணு' காங்கேசனில்

[யாழ்ப்பாணம்]

தடை செய்யப்பட்ட பொருள்களை ஏற்றிவந்த 'றுகுணு' கப்பல் தொடர்ந்தும் காங்கேசன் துறையிலேயே பொருள்களை இறக்கிவருவதாக நேற்று மாலை கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பொருள்கள் காங்கேசன் துறையிலேயே களஞ்சியப் படுத்தப்படும் எனவும், பொருள்கள் முழுவதையும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் காலிழந்தார்

(யாழ்ப்பாணம்)

அராலி கொட்டக்காட்டுப் பகுதியில் மிதிவெடியில் சிக்கிய இளைஞர் ஒருவர் தனது காலொன்றை இழந்துள்ளார்.

பண்டத்தரிப்பு சில்லாலையில் இருந்து இடம்பெயர்ந்து நவாலி சீலன் முகாமில் வசித்து வரும் வீரசிங்கம் விக்னேஸ்வரன் (வயது 19) என்பவர் நேற்றுக்காலை தொழிலுக்காக அராலி கொட்டக்காட்டு பகுதிக்கு சென்ற போதே இச் சம்பவம் நிகழ்ந்தது (சி)

## யாழ். அரசாங்க அதிபர் கிளிநொச்சி விஜயம்

யாழ். அரசாங்க அதிபர் திரு.கா.மாணிக்கவாசகர் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கிளிநொச்சி சென்றுள்ளார்.

கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பிரிவினரின் பணிப்பின் பேரிலேயே யாழ் அரச அதிபர் கிளிநொச்சிக்குச் சென்றுள்ளதாக கொழும்பில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன நேற்று முன் தினம் கிளிநொச்சிக்கு தரை மார்க்கமாக வந்தடைந்த அரச அதிபர் இன்றைய தினம் மீண்டும் கொழும்பு திரும்ப இருக்கிறார் என்று கிளிநொச்சியில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். அரச அதிபரின் கிளிநொசிக்கான திடீர் விஜயம் குறித்து தெளிவான காரணம் எதையும் எந்த தரப்பில் இருந்தும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

## கரும்புலிகள் நினைவு நாள் மன்னாரில் உருவப்பட ஊர்தி

[மன்னார்]

மன்னாரில் கரும்புலிகள் தினம் நேற்று முன்தினம் மிகவும் எழுச்சிபூர்வமாகக்கொண்டாடப்பட்டது. மன்னாரில் உள்ள மடு, நானாட்டான், பள்ளமடு, முழங்காவில், பூநகரி, அடம்பன் பகுதிகளில் வட்டரீதியாக நடைபெற்ற கரும்புலிகள் நினைவு கொண்டாட்ட நிகழ்வாக விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு வைபவங்கள், கலை நிகழ்வுகள், மற்றும் வீரவணக்கக் கூட்டம் ஆகியன இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளின்போது மேஜர் டாமபோவின் தாயார் முழங்காவில் வட்டத்தில்

மடுவட்டத்தில் வீரவணக்கக் கூட்டம் ஆரம்பமானது இதன்போது ஈகைச் சுடரை மன்னார் மாவட்டத் தளபதி திரு. கதிர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து இருநிமிட மௌன அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமானது.

மடு வட்டப் பொறுப்பாளர் திரு. அல்வின் தலைமையில் நடைபெற்ற வீரவணக்கக்கூட்டத்தில் தமிழீழ கல்விக் கழகத்தின் சார்பில் திரு நாவண்ணன் உரை நிகழ்த்தினார். பொதுமக்கள் சார்பில் திரு. பத்தன், திரு. எட்மன் மற்றும் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் நந்தகுமார் ...

## கைதிகள் விடுவிப்பு தோல்வி செஞ்சிலுவையே காரணம்

### கொழும்பு பத்திரிகைகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

யுத்தக்கைதிகள் விடுவிப்பு தொடர்பான முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே காரணம் என கொழும்பி பத்திரிகைகள் குற்றஞ்சாட்ட ஆரம்பித்துள்ளதாக பி.பி.ஸி தெரிவித்தது.

அரச கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளே இந்த புதிய குற்றச்சாட்டுகளை வெளியிடு... முன்னதாக போர்க்கைதிகள் விடுதலை முயற்சியில் விடுதலைப் புலிகள் அரசை ஏமாற்றி விட்டதாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## சர்வசன வாக்கெடுப்பு சிலமாதங்களில் நடத்தலாம்

### ராணுவ அதிகாரி கருத்து

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாககெடுப்பு நடத்தக் கூடிய சூழ்நிலையை இன்னும் ஒருசில மாதங்களில் தம்மால் உருவாக்க முடியும் என இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவதுள்ளனர்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் நேறறைய கூட்டத்திலேயே மேற்படி கருத்தை

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு





## கரும்புலிகள் நினைவுநாள் மன்னாரில் உருவப்பட ஊர்தி

[மன்னார்]

மன்னாரில் கரும்புலிகள் தினம் நேற்று முன்தினம் மிகவும் எழுச்சிபூர்வமாகக் கொண்டாடப்பட்டது. மன்னாரில் உள்ள மடு, நானாட்டான், பள்ளமடு, முழங்காவில், பூநகரி, அடம்பன் பகுதிகளில் வட்டரீதியாக நடைபெற்ற கரும்புலிகள் நினைவு கொண்டாட்ட நிகழ்வாக விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு வைபவங்கள், கலை நிகழ்வுகள், மற்றும் வீரவணக்கக் கூட்டம் ஆகியன இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளின்போது மேஜர் டாமபோவின் தாயார் முழங்காவில் வட்டத்தில் கௌரவிக்கப்பட்டார்.

சகல வட்டத்திலும் கரும்புலிகளின் உருவப்படங்கள் ஊர்தியில் வைக்கப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக கொண்டு செல்லபபட்டபோது பெருந்திரளான மக்கள் வீதிகளில இரு மருங்கிலும் நின்று அஞ்சலி செலுததினர்.

மாலை 7.00 மணியளவில் மடுவட்டத்தில் வீரவணக்கக் கூட்டம் ஆரம்பமானது. இதன்போது ஈகைச்சுடரை மன்னார் மாவட்டத் தளபதி திரு. கதிர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து இருநிமிட மௌன அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமானது.

மடுவட்டப் பொறுப்பாளர் திரு. அல்வின் தலைமையில் நடைபெற்ற வீரவணக்கக்கூட்டத்தில் தமிழீழ கல்விக் கழகத்தின் சார்பில் திரு நாவண்ணன் உரை நிகழ்த்தினார். பொதுமக்கள் சார்பில் திரு. பத்தன், திரு. எட்மன் மற்றும் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் நந்தகுமார் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

திரு. நந்தகுமார் தனது உரையில், கரும்புலிகள் வெடிமருந்து நிரபபிய வாகனத்துடன் இராணுவ முகாமிற்குள் சென்று அம்முகாமையே சிதறடித்தவர்கள். அம்முகாம்களில ஒவ்வொரு கரும்புலியினது உயிரும் வளர்ந்துகொண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகர் செல்ல 4 தமிழருக்குத் தடை

(வவுனியா)

நேற்று வவுனியா நகர் சென்ற பயணிகளில் 26 பேரை சிறிலங்கா இராணுவ புலனாய்வாளர்கள் கூட்டிச் சென்று பிறவுண் கம்பனி முகாமில் வைத்து விசாரணை செய்தனர்.

தீவிர விசாரணையின் பின் இவர்களில் பம்பைமடு, கிளிநொச்சி, விசுவமடு பகுதியைச் சேர்ந்த 4 பேரை சிறிலங்கா இராணுவத்தினர் வவுனியா நகர் செல்ல அனுமதிக்காது திருப்பி அனுப்பிவிட்டனர்.

### வவுனியா நகர் செல்லும் பயணிகளை

## புகையிரத பாதையால்வர இராணுவம் கட்டளை

(வவுனியா)

வவுனியா நகரை நோக்கி நேற்று சென்ற பயணிகளை வழமையான பாதையை விட்டு புகையிரதப்பாதையினூடாக வருமாறு இராணுவத்தினர் கட்டளையிட்டனர். இதனால் பீதியடைந்த பல பொதுமக்கள் வவுனியா நகர் செல்லாது திரும்பிவிட்டனர். எனினும் புகையிரதப்பாதை

(4 ஆம் பக்கம் பார்க்க)

...தரப்பினரான விடுதலைப்புலிகள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவில் ஊடுருவி இருக்கும்போது பொறுப்புள்ள ஒரு சர்வதேச அமைப்பான செஞ் நிலைமையாக நடந்து கொள்ளும். விடுதலைப்புலிகள் சர்வதேசச் செஞ்சிலுவைக் குழுவில் ஊடுருவியிருப்பதற்கும், இக் குழுவின் நடவடிக்கைகளுக்கும் ... வதேச செஞ்சிலுவைக்குழு ஆரம்பம் முதலே பாரபட்சமாக நடந்துள்ளதா? இந்த விளககங்களுக்குப் பதில்சொன்

(4ஆம பக்கம் பார்க்க)

# கைதிகள் விடுவிப்பு தோல்வி செஞ்சிலுவையே காரணம்

## கொழும்பு பத்திரிகைகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

யுத்தக்கைதிகள் விடுவிப்பு தொடர்பான முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே காரணம் என கொழும்பிலிருந்து வெளியாகும் சில பத்திரிகைகள் குற்றஞ்சாட்ட ஆரம்பித்துள்ளதாக பி.பி.ஸி தெரிவித்தது.

அரச கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளே இந்த புதிய குறறச்சாட்டுகளை வெளியிடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக போர்க்கைதிகள் விடுதலை முயற்சியில் விடுதலைப் புலிகள் அரசை ஏமாற்றி விட்டதாக கொழும்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது

[4 ஆம் பக்கம் பார்க்க]

# யுத்தக்கைதிகளை விடுவிக்க செஞ்சிலுவைஊடாக முயற்சி

## விமல் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள எஞ்சிய போர்க்கைதிகளையும் விடுவிக்க அரசு சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் ஊடாக முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் விமல் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று சபை ஒத்திவைப்பு வேளையில் சுதந்திரக் கட்சி உறுப்பினர் நிமால் சிறிபால்டி சில்வா எழுப்பியகேள்விகளுக்கு பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். போர்க் கைதிகள் விவகாரம் தொடர்பாக பாராளுமன்றத்தில் இன்று விவாதிக்க கடந்த வாரம் எதிர்க்கட்சிகள் முடிவெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

போர்க்கைதிகளை விடுவிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது. அரசின் கப்பலில் இருந்து விடுதலைப் புலிகள் பலவந்தமாக பொருள்களை எடுத்துச் சென்றனரா என்ற கேள்விகளை நிமால் சிறிபாலடிசில்வா எழுப்பினார்.

வடபகுதிக்கு பொருள் கொண்டு சென்ற எந்த ஒரு கப்பலையும் புலிகள் பலவந்தமாக தடுத்து வைக்கவோ கைப்பற்றவோ இல்லை என

(4 ஆம் பக்கம் பார்க்க]

### மீனவருக்கு துப்பாக்கிச் சூடு

[யாழ்ப்பாணம்]

பண்ணைக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் நேற்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது மண்டைதீவுப் பகுதியில் இருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தின்போதே மார்பு பகுதியில் காயமடைந்தார். மேற்படி காயமடைந்தவர் செபஸ்தியாம்பிள்ளை நீக்கலஸ் (வயது 22) என்பவராவார். (சி)

## ராணுவ அதிகாரி கருத்து

[கொழும்பு]

கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாககெடுப்பு நடத்தக் கூடிய சூழ்நிலையை இன்னும் ஒருசில மாதங்களில் தம்மால் உருவாக்க முடியும் என இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவத்துள்ளனர்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் நேறறைய கூட்டத்திலேயே மேற்படி கருத்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



2 ஆம லெப.
வேல்நாயகம் [சித்திரன்]



2 ஆம் லெப்.
ரகுபரராஜ் [மதன்]

03-07-93 அன்று காலை 8.30 மணியளவில் மட்டக்களப்பு வெல்லாவெளி, தளவாய் என்ற இடத்திற்கு விடுதலைப்புலிகள் போராளிகள் சென்றுகொண்டிருந்த போ சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். இதன்போது போராளிகளும் குண்டுத் தாக்குலை மேற்கொண்டனர். இதனால் சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை.

இச்சம்பவத்தில் 2ஆம் லெப்டினன்ட் வேல்நாயகம் / சித்திரன் (கந்தையா சித்திரன் வீரமுனை, சம்மாந்துறை) எனும் போராளியே வீரச்சாவடைந்தவராவர்.

27-06-93 அன்று காலை 9.00 மணியளவில் மட்டக்களப்பு மகிழவெட்டுவான் என்ற இடத்துக்குச் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகள் போராளிகள் மீது ரெலோ தேசத் துரோகிகள் பதுங்கியிருந்து தாக்கியதில் 2 ஆம் லெப்டினன்ட் ரகுபரராஜ் / மதன் (டேவிற் அன்ரனி ஆறுமுகத்தான் -குடியிருப்பு, ஏறாவூர், மட்டு.) எனும் போராளி வீரச்சாவடைந்தார்.

இவ்விரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துக்கொள்கின்றனர்.

# கரும்புலிகள் நாளில் கிளிநொச்சியில் பேரணி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நேற்று முனதினம் மாபெரும் பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. கரடிபபோக்கு சந்தியிலிருந்து மாலை 4 மணிக்கு பேரணி ஆரம்பமாகி முற்றவெளி மைதானத்தை வந்து சேர்ந்தது. விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பாண்ட் வாத்தியக்குழு முன் செல்ல காவல்துறை, இராணுவப் பிரிவு ஆகியோரின் அணிநடையும் இடம்பெற்றது.

கரும்புலித் தாக்குதலை காட்டும் வெடிமருந்து நிரம்பிய மாதிரிப் படகு தாங்கிய ஊர்தியும், கரும்புலிகளின் படங்களை தாங்கிய ஊர்தியும் பேரணியில் சென்றன. இரவு 7 மணிக்கு முற்றவெளி மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. வன்னி மாவட்ட கலைபண்பாட்டுக் கழக பொறுப்பாளர் செழியனின் தலைமையில் நடந்த கூட்டத்தில், வன்னிமாவட்ட தளபதி கபிலன் ஈகைச்சுடரை ஏற்றினார். வன்னிமாவட்ட மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் அன்பரசி, வன்னி அரசியல் துறைப் பொறுப்பாளர் மனோ, தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் ஆகியோர் உரையாற்றினர்.

# பதுங்கியிருந்த படையுடன் புலிகள் கடும் மோதல்

## 6 போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் காஞ்சிரன்காடு என்னும் இடத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகள் சென்றுகொண்டிருந்த வேளை சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதலை நடாத்திய போது விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை நடாத்தினர்.

இச்சம்பவம் கடந்த இரண்டாம் திகதி காலை 10 மணியளவில் இடம்பெற்றது. இம் மோதலின் போது சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை இம்மோதலில் ஆறு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

★ லெப்டினனட் செந்தில் (வேலுப்பிள்ளை செல்வம் சந்திவெளி, மொறக்கொட்டாஞ்சேனை)

★ லெப்டினனட் கவிதீஸ்வரன்/நிலான் (சிவானந்தம் கருணைநாதன், ஊற்றுச்சேனை, மட்டக்களப்பு)

★ 2 ஆம் லெப்டினன்ட் விஜயநாதன் / விஜி (முத்துவேல் மேகநாதன், வைத்தியசாலை வீதி, சந்திவெளி

★ 2 ஆம் லெப்டினன்ட் உமாரமணன்/லோகிதன் (சின்னத்தம்பி பூபாலபிள்ளை, வாகனேரி பெண்டுகள் சேனை)

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?**

மேற் குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம் திருத்தக் கொடுத்து பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச்அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6937)

**விற்பனைக்கு**

இரண்டுமாதங்கள்கொண்ட Hyline (கைலைன்) பேட்டு குஞ்சுகளும்அடைவைப்பதற்கு உகந்த வெள்ளடி, பன்ரம், பாமஸ் முட்டைகளும் உடன் விற்பனைக்கு உண்டு. 70/6 ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம் (சி 6963)

**தேவை**

அங்கீகரிக்கப்பட்ட அக்குபஞ்சர் வைத்தியர் தேவை. 11 07-93 ஞாயிற்றுக்கிழமை 10-00 மணி முதல் 1-00 மணி வரை நேரில் சமுகமளிக்கவும். தலைவர் வட - இலங்கை அங்குபஞ்சர் சங்கம், 35 நவலர் வீதி ஐந்து சந்தி யாழ்ப்பாணம். (5286)

**கொழும்பு ஸ்ரூடியோ**

நினைவஞ்சலி, சரமகவிக்கு தேவையான (Blo ks பழைய படங்களில் இருந்து அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான றபர்சீல்—ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்: கொழும்பு ஸ்ரூடியோ 55 மணிக்கூட்டு வீ . யாழ்ப்பாணம் 6962)

**திருத்திக் கொடுக்கப்படும்**

தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரம், பிரதிபண்ணும் இயந்திரம் சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களால் குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும். றொக்வூட் GR மருதலிங்கம் 8/1, E அம்மன் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (5211)

**தவறிவிட்டது**

கந்தையா தியாகராஜா என்பவருடைய அடையாள அட்டை கொக்குவில் சந்தியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்...

# கரும்புலிகளின் மனோதிடம்; எதனாலும் அடக்கமுடியாது

### கரும்புலிகள் தினக் கூட்டத்தில் சூசை

(நெல்லியடி)

உலகின் எந்தவொரு ஆயுத பலத்தாலும், எந்தவொரு தொழில்நுட்பத் திறனாலும் தடுத்துவிடமுடியாத ஓர் ஆயுதம் தான் கரும்புலிகள். கரும்புலிகள் அணியில் சேர்வதற்காக எத்தனையோ பேர் போட்டி போட்டுக்கொண்டு நிற்கின்றார்கள். இவர்களுடைய இந்த மனோபலம்மூலம் நிச்சயமாக எமது இலக்கை வென்றெடுக்க முடியும். இவ்வாறு வடமராட்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கரும்புலிகள் நாள் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் விசேடதளபதி திரு சூசை தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உரைநிகழ்த்திய யாழ் மாவட்ட விசேட தளபதி திரு. செல்வராசா தமது உரையில்,

எமது விடுதலைப் போராட்டத்தை அழிப்பேன். தலைவர் பிரபாகரனை காலடியில் விழ வைப்பேன் என்று கங்கணங் கட்டி எத்தனையோ அப்பாவி மக்களைக் கொன்று குவித்த ராஜீவ்காந்தி இன்றுஉயிரோடு இல்லை. விடுதலைப் புலிகளை அழிப்பேன். தமிழர்களைக் கொன்று குவிப்பேன் என்று சூழுரைத்து இராணுவத்தை வழிநடத்திக்கொண்டிருந்த இராணுவ அமைச்சர்கள் லலித்அத்துலத்முதலியும், ரஞ்சன் விஜயரட்ணாவும் இன்று இல்லை. அதேபோல் பலாலி இராணுவத் தளத்திலிருந்து செயற்பட்டு எத்தனையோ மக்களைக் கொன்று குவித்த விஜய விமலரட்ணாவும் இப்போதுஇல்லை டென்சில்கொப்பேகடுவவும் இல்லை இவைஎல்லாம் எதைக்காட்டுகின்றன? நிச்சயமாகத் தர்மம் வெல்லும் அதர்மம் அழியும் என்பதைத் தான் உணர்த்துகின்றனஎன்று குறிப்பிட்டார்.

இங்கு உரை நிகழ்த்திய மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கணேஷ் தமதுரையில்,

உலகமே இன்று எங்களின் உணர்வலைகளை எம் போராட்டத்தின் வேகத்தை, சக்தியைப்பெருமளவு பாராட்டுகின்றது என்றால் அதற்குக் கரும்புலிகளும் ஒரு காரணமாக இருக்கின்றனர் என்று குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் ரதி தமதுரையில்,

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள். எமது தேசமும் வித்தியாசமானது. கரும்புலிகள் சாவை ஏற்கனவே அறிந்தவர்கள் எனத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தமது உரையின் போது.

சிங்கள அரசின் மிகப்பெரிய படைக்கு எதிராக சிறு தொகையிலான இந்த இளைஞர்கள் எப்படி போராடப் போகின்றனர் என ஆரம்ப கட்டத்தில் சிலர் பேசிக் கொண்டனர். இவர்கள் பின்னர் ஒரு கெரில்லா அமைப்பாக தோற்றம் கொண்ட வேளையிலும் பலர் தமக்குள் இப்போராட்டம் குறித்து பலவாறு பேசினர். வீணாக இவர்கள் அழியப் போகின்றனர் எனக் கதைத்ததை நாம் அறிவோம். ஆனால், இன்று அவ்வாறு கதைத்தவர்களுக்கு ஒன்று தெரியும் மிகப் பலம் பொருந்திய உலகை அதிரவைக்கும் அணுகுண்டை விட பலமான ஆனமபலம், மனஉறுதி இந்த தலைவனிடமும், இந்தப் போராளிகளிடமும் இருக்கிறது என்பதை.

கரும்புலிகளின் மனோபலத்திற்கு முன் எந்த சக்தியும் நிற்க முடியாது எனக் காட்டப்பட்டுள்ளது. சிங்கள இராணுவ அதிகாரிகளே கரும்புலி தாக்குதல் முன் தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என ஒத்துக் கொண்டுள்ளனர் என்பதை பத்திரிகை, வானொலி செய்திகள் மூலம் நாம் தெரிந்து கொண்டிருக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

## லஞ்சம் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கச்சேரியில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கு லஞ்சம் கொடுக்க வேண்டிய நிலை நிலவுவதாக அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அப்பாவிக் கிராமவாசி ஒருவர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் கோரி விண்ணப்பித்த போது கொழும்பிலிருந்துதான் பெற வேண்டும் என்று பதில் கூறப்பட்டது. ஆனால் பதிவாளர் அலுவலக சிற்றூழியர் ஒருவருக்கு ரூபா 200 கொடுத்தும் அதே பிறப்பு சான்றிதழ் அன்று மாலையே கிடைத்தது என்றும் அங்கு எடுத்துக் கூறப்பட்டது.

## நொச்சிமோட்டை வந்தனர்

[யாழ்ப்பாணம்]

நேற்று காலை 9 மணியளவில் நான்கு கவசவாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் நொச்சிமோட்டை பாலம் வரை வந்தனர்.

# உலகம் வியக்கும் வண்ணம் போராட்டத்தை வளர்த்தோர்

### கரும்புலிகளுக்கு புகழ்மாலை

[தென்மராட்சி]

''இந்த மண்ணுக்காக உயிர் நீத்த மாவீரர்கள் வரிசையில் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தினை உலகமே வியக்கும் அளவுக்கு வளர்த்தவர்கள் புலிகள். எதற்கும் அஞ்சாதவர்கள் என்பதை உலகுக்குக் காட்டியவர்கள் கரும்புலிகள்.''

இவ்வாறு கரும்புலிகள் நாளை முன்னிட்டு தென்மராட்சிக் கோட்டத்தில் மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய திரு. யோகரெட்ணம் யோகி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ' இந்த மண்ணிலே அவர்கள் வாழ்ந்த நாளிலே வாழ்ந்தோம் இவர்களின் வீரம் எல்லையில்லாததோர் வரம். இவற்றின் மூலம் எங்களை நாம் அறிந்து கொள்கிறோம்'' என்றார்

திரு.தேவர் உரையாற்றுகையில் ' எதிரியானவன் எம்மை அழிப்பதற்கு தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு கொண்டே பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்திருக்கிறது என பிரசாரம் செய்கிறான் ஆனால் அரசுக்கு புலிகளைப் பற்றி நன்கு தெரியும் எமது கழுத்தில் சயனைட் குப்பியும் கையில் ஆயுதமும் இருக்கும் வரை அரசு ராணுவ ரீதியாகவோ அரசியல் ரீதியாகவோ நசுக்கி விட முடியாது'' என்றார்.

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம் பேசுகையில், எமது போராட்டத்தில் கடல் பாதைக்கு முக்கியமான இடம் உண்டு எமது கடலில் கடற்படையினர் எமது மக்கள் மீன் பிடிக்கச்சென்றபோது கடலிலே வெட்டி கொலைகள் பல செய்த சம்பவமும் உண்டு இப்படிப்பட்ட சம்பவத்தினை சவாலாகவைத்து அவர்களுக்கு பாடம் புகட்டியவர்கள்தான் கரும்புலிகள். தமது உடலோடு சாவை கொண்டுசென்று நடுக்கடலிலே கடற்படையின் சரித்திரத்தை முடித்தவர்கள். எனவே இவர்கள் விட்ட பாதைப் படிகள் வழியாக நாமும் படியேறவேண்டும் என உறுதி எடுப்பதே அவர்களுக்கு செய்யும் அஞ்சலி என்றார்.

யாழ் மாவட்ட மகளிர்பிரிவு அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வியும் உரையாற்றினார். (86)

# வெற்றியின் எல்லைவரை போராட்டம் தொடரும்

## ஈராக் மீதான தாக்குதல் சிறிலங்கா கவலையாம்

(கொழும்பு)

ஈராக் மீது அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது குறித்து சிறிலங்கா கவலையடைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஹரல்ட் ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ஈராக் ஆகிய நாடுகள் எமது நட்பு நாடுகள். எனவே இத்தாக்குதல் குறித்து நாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். இந்த நடவடிக்கையில் இறந்த பொதுமக்கள் குறித்தும் ஆழ்ந்த கவலையடைகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 2-ம் ஆண்டு வீரவணக்கம்



பிறப்பு: 18. 11. 1972

வீரச்சாவு: 07. 07. 1991

**வீரவேங்கை பரணி**

(நாகரட்ணம் இன்பதாசன்)

(முள்ளியவளை)

வேரூன்றி விழுதுவிட்ட
வேங்கையே பரணி
வீரத்தை விதைத்துவிட்டு - நீ
சென்று இரண்டாண்டு ஆனகடா
காலங்கள் கடந்தாலும் - உன்
சாதனைகள் மறையாது
உன்னத தலைவரின் வழிகாட்டலில்
உன்நினைவுடன் நாமும் தொடர்வோம்.

உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

(5291)

## நினைவு கூருகின்றோம் ... 1993-07-07

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் கரவெட்டி மண்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**நரேஷ்** (மகேந்திரன் மணிச்செல்வன் - 3-ம் வாய்க்கால், பன்னங்கண்டி, பரந்தன் - கிளிநொச்சி)

திருமலை - சாம்பல்தீவு, சம்பூர் பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட 02 மாணவர்கள் உட்பட 20 தமிழர்கள்.

இதே தினம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்றிருந்து சாவடைந்த யாழ்/வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர்.

டர்புகொள்ளுங்கள்:கொழும்பு ஸ்ருடியோ 55 மணிக்கூட்டு வீ . யாழ்ப்பாணம் 6962)

## திருத்திக் கொடுக்கப்படும்

தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரம், பிரதிபண்ணும் இயந்திரம் சிறந்த தொழில் நுட்ப வல்லுநர்களால் குறைந்த செலவில் உத்தர வாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும். றொக்லூட் GR மருதலிங்கம் 8/1, E அம்மன் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

(5211)

## தவறிவிட்டது

கந்தையா தியாகராஜா என்பவருடைய அடையாள அட்டை கொக்குவில் சந்தியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கொக்குவில் சந்தி ஈசன் எண்ணெய்க் கடையில் ஒப்படைக்கவும்.

சி-6965)

போதுஇல்லை டென்சில்கொப்பேகடுவவும் இல்லை இவைஎல்லாம் எதைக்காட்டுகின்றன? நிச்சயமாகத் தர்மம் வெல்லும் அதர்மம் அழியும் என்பதைத் தான் உணர்த்துகின்றனஎன்று குறிப்பிட்டார்.

இங்கு உரை நிகழ்த்திய மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கணேஷ் தமதுரையில்,

உலகமே இன்று எங்களின் உணர்வலைகளை எம் போராட்டத்தின் வேகத்தை, சக்தியைப்பெருமளவு பாராட்டுகின்றது என்றால் அதற்குக் கரும்புலிகளும் ஒரு காரணமாக இருக்கின்றனர் என்று குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் ரதி தமதுரையில்.

சாவு என்பது எல்லோருக்கும் நிச்சயமானதுதான். ஆனால் இந்தக் கரும்புலிகளின் சாவு வித்தியாசமானது.

இவ்வாறு கரும்புலிகள் நாளை முன்னிட்டு தென்மராட்சிக் கோட்டத்தில் மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய திரு. யோகரெட்ணம் யோகி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் 'இந்த மண்ணிலே அவர்கள் வாழ்ந்த நாளிலே வாழ்ந்தோம் இவர்களின் வீரம் எல்லையில்லாதரம் செய்கிறான் ஆனால் அரசுக்கு புலிகளைப் பற்றி நன்கு தெரியும் எமது கழுத்தில் சயனைட் குப்பியும் கையில் ஆயுதமும் இருக்கும் வரை அரசு ராணுவ ரீதியாகவோ அரசியல் ரீதியாகவோ நசுக்கி விட முடியாது'' என்றார்.

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம் பேசுகையில், எமது போராட்டத்தில் கடல் பாதைக்கு முக்கியமான இடம் கடலிலே கடற்படையின் சரித்திரத்தை முடித்தவர்கள். எனவே இவர்கள் விட்ட பாதைப் படிகள் வழியாக நாமும் படியேறவேண்டும் என உறுதி எடுப்பதே அவர்களுக்கு செய்யும் அஞ்சலி என்றார்.

யாழ் மாவட்ட மகளிர்பிரிவு அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வியும் உரையாற்றினார். (86)

# வெற்றியின் எல்லைவரை போராட்டம் தொடரும்

## - புதுவை இரத்தினதுரை

[யாழ்ப்பாணம்]

இந்த தேசத்தில் எதிரியால் சுதந்திரமாக நடமாடமுடியாத நிலையை எங்கள் கரும்புலிகள் ஏற்படுத்தியுள்ளனர். வரலாற்றின் ஒரு பதிவு இன்றைய நிகழ்வு. கரும்புலிகளின் உணர்வுகளை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது

இவ்வாறு நேற்றுமுன்தினம் மானிப்பாய்மாவீரர்கலையரங்கத்தில் இடம்பெற்ற கரும்புலிகள் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு பேசும் போது யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி குறிப்பிட்டார்.

எமது மக்களுக்கு கரும்புலிகள் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளனர். உலக ஆதிக்கத்திற்கும் இனவாதத்திற்கும் எமது பலத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இன்று ஆட்சியாளர் அழிவின் விளிம்பில் உள்ளனர். நாம் எமக்கான விடுதலையடையும் நோக்கில் முன்னிற்கிறோம் என்று மேலும் அவர் தெரிவித்தார்.

கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை அங்கு பேசும் போது,

உலகம் கரும்புலிகளைப் பார்த்து ஆச்சரியப்படுகிறது. கரும்புலித் தாக்குதலைத் தடுக்க முடியாது என எதிரி இன்று ஒப்பாரி வைக்கிறான்

நாளை எமது மண்ணில் ஒரு பூ விரியும் என்ற நோக்கில்தான் கரும்புலிகள் தம்மை அர்ப்பணிக்கச் செல்கிறார்கள் இந்த மண்ணிற்குச் சுதந்திரம் வேண்டும் இதையே அவர்கள் விரும்பினார்கள்.

வெற்றியின் எல்லை எங்களுக்குத் தெரியும் வரை இப் போராட்டம் தொடரும். விடுதலைக்கான தேதி கிடைக்கும் வரை ஓயக் கூடாது என்று குறிப்பிட்டார்.

திரு. அரசண்ணா பேசும் போது இந்தக் கரும்புலிகளின் தோற்றத் தோடுதான் எங்கள் தேசிய விடுதலைப் போராட்டம் உலக ரீதியில் விளங்கிக் கொள்ளப்பட்டது.

எங்களில் ஓர் உயிர் எதிரியின் நூற்றுக் கணக்கான உயிர்களைப் பிரிக்கிறது என்றார்.

பெண்கள் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் செல்வி மாலினி உரை நிகழ்த்தும் போது,

தமிழ் மக்களின் எதிர்காலம் சோகமயமாக இருந்த காலத்தில் இந்தக் கரும்புலிகள் தோன்றினார்கள்.

நாம் எமது தேசிய பலத்தை வளர்த்தெடுத்து எதிரியை தோல்வியடையச் செய்ய வேண்டும் என்றார்.

நீதிநிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா பேசும் போது,

கரும்புலிகள் நாள், தேதி தெரிந்து தற்கொடை செய்து கொண்டவர்கள் இவர்களின் அர்ப்பணிப்பை எமது மண் நினைத்துக் கொண்டேயிருக்கும் என்றார்.

கூட்ட ஆரம்பத்தில் கரும்புலிகளின் உருவப்படங்களுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன.

இறுதியில் பல கலை நிகழ்வுகள் அங்கு இடம் பெற்றன.

(தி)

## புதிய சந்தை

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் சென்ற மாதம் தொடக்கம் புதிய சந்தை ஒன்று இயங்கி வருகின்றது. தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்ட இச் சந்தையினை 'பண்டிதர் குடியிருப்பு விளையாட்டுக் கழகத்தினர்' கண்காணித்து வருகின்றனர்.

(22)

உ

சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் ஆனிமாதம் 26ஆம் நாள் (10.07.1993) சனிக்கிழமை உத்தர நட்சத்திரமும் ஸப்தமி திதியும் அமிர்த யோகமும் கூடிய சுபதினத்தில் பகல் 10.00 முதல் 11.30 மணிக்குள் வரும் கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில்

| மட்டுவில் வடக்கு, இலங்கை | மயிலிட்டி, இலங்கை |
|---|---|
| திரு திருமதி தர்மலிங்கம் தம்பதிகளின் | திரு. திருமதிகிருஷ்ணசாமி தம்பதிகளின் |
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| **ஸ்ரீதரன்** | **குலராதா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண மண்டபம்:- Kathalisches Gemeinde Zentrum, Kirchstrasse Kleinglattbach, 7143 Vaihingen.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு திருமதி தர்மலிங்கம் (இலங்கை) | திரு. திருமதி கிருஷ்ணசாமி (இலங்கை) |
| திரு. த. ஸ்ரீபாஸ்கரன் (சுவிஸ்) | திரு. திருமதி சச்சிதானந்தமூர்த்தி (ஜேர்மனி) |
| திரு த ஸ்ரீவிக்கினராஜா (சுவீடன்) | திரு கி. குலராஜா (ஜேர்மனி) |
| திரு த. ஸ்ரீமையூரன் (இலங்கை) | திரு. மு சிவகுமார் (பிரான்ஸ்) |
| Tel- 07021 / 71605 | Tel- 07042 / 12584 |

முக்கிய குறிப்பு: 10.07.1993 சனிக்கிழமை அன்று மட்டும் மணமகனின் பெற்றோரின் இல்லத்தில் ஒரு விருந்துபசாரம் இடம்பெறும் இதில் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்களின் நல்வரவை நாடும்,
திரு. திருமதி தர்மலிங்கம்
அரசினர் வைத்தியசாலை
சாவகச்சேரி.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

[தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை] (5279)

(5291)

# நினைவு கூருகின்றோம் ... 1993-07-07

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் கரவெட்டி மண்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**நரேஷ்** (மகேந்திரன் மணிச்செல்வன் - 3-ம் வாய்க்கால், பன்னங்கண்டி, பரந்தன் - கிளிநொச்சி)

திருமலை - சாம்பல்தீவு, சம்பூர் பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளில் படுகொலை செய்யப்பட்ட 02 மாணவர்கள் உட்பட 20 தமிழர்கள்.

இதே தினம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்றிருந்து சாவடைந்த யாழ்/வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர்.

1988ஆம் ஆண்டு தங்கவேலாயுதபுரம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய-

**குமார்** (சின்னத்தம்பி குமார் - காரைதீவு 03-அம்பாறை)

1989ஆம் ஆண்டு விளானில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட பண்டத்தரிப்பைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1990ஆம் ஆண்டு அம்பாறையில் முஸ்லிம் குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல்போன மத்திய முகாம் 4-ம் குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன். அக்கரைப்பற்றுக்கு வேலைக்கு சென்று காணாமல் போன புன்னைச்சோலை குடியிருப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

மட்டுநகரில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

கிண்ணியாப் பகுதியில் எரிந்த நிலையில்சடலங்களாக மீட்கப்பட்ட 30 தமிழர்கள்.

திருமலை - மட்டப்புக்கழி, நல்லூர்ப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் ஊர்காவல் படையினரால் பாலியல வன்முறைக்குட்படுத்தப் பட்ட பின் படுகொலை செய்யப்பட்ட 10 பெண்கள், கழுத்து வெட்டிக் கொல்லப்பட்ட 20 ஆண்கள் ஆகிய 30 தமிழர்கள்.

யாழ் - பண்ணை வீதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

**பரணி/தாசன்** (நாகரத்தினம் இன்பநாதன் - 2-ம் வட்டாரம், முள்ளியவளை-முல்லைத்தீவு)

மட்டு - திக்கோடை தும்பன்கேணி, 40-ம் கிராமம் பகுதிகளைச் சுற்றிவளைத்த பெரியபோரதீவு - வெல்லாவெளி, பாலையடிவெட்டை முகாம்களைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோத சக்திகளினால் சுட்டும், வெட்டியும் கொலை செய்யப் பட்ட 03 தமிழர்கள்.

யாழ் - வலிகாமம் வடக்குப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் பிரவேசித்தது முதல் இதே தினம் வரை அவர்களது பிடியில் சிக்கிய நிலையில் மருத்துவ வசதியின்றிப் பலியான 09 தமிழர்கள்.

மட்டு - ஆலங்குளத்தில் இராணுவம் சுற்றிவளைப்பில் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

மட்டு - வந்தாறுமூலையில் ஊர்காவல் படையால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6961)

### சிந்தனைக்கு

தவறுகளுக்குத் தான் அரசாங்கத்தின் ஆதரவு தேவையாய் இருக்கிறது. வாய்மை, துணை எதுவுமின்றி தன்னந்தனியே நிற்க முடியும்.

— தாமஸ் ஜெஃப்பர்ஸன்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## விசாரிப்பது போதாது நீதியும் தேவை

நீதி விசாரணை நடத்தப்பட்டது எனக் காட்டுவதினால் மட்டும் நீதி வழங்கப்பட்டதாகக்கொள்ள முடியாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிட்ட வேண்டும். அதேவேளை, விசாரணையுடன் சம்பந்தப்பட்டவர்கள் பின்னர் பாதுகாப்பாகவும், அச்சமின்றியும், சுதந்திரமாகவும் நடமாட உத்தரவாதம் இருக்கவேண்டும்.

ஆனால், கடந்த காலத்தில் இருந்து இன்றுவரை சிறிலங்கா அரசாங்கத் துருப்புக்கள் மேற்கொண்ட படுகொலைகள் குறித்து தமிழருக்கு நீதி கிட்டவில்லை. அதுகுறித்து சுதந்திரமாக சாட்சியம் அளிக்கவோ பின்னர் சுதந்திரமாக நடமாடவோ முடியவில்லை. ஆரம்பத்தில் அரச துருப்புக்கள் மேற்கொண்ட படுகொலைகள் தொடர்பாக அரசாங்கம் பெரிதும் அலட்டிக்கொள்ளவில்லை. படுகொலை புரிந்தவரை பாதுகாக்கும் நோக்கில் அவர்களை சித்த சுவாதீனம் அற்றவர் என்ற பட்டியலில் சேர்த்துக் கொண்டது.

இதேவேளை, நெருக்குதல்கள் அதிகரித்த வேளை, தனிநபர் விசாரணைக் கமிசன் என்றும். ஜனாதிபதி ஆணைக்குழு எனவும் விசாரணைகளைத் ஆரம்பித்தது. ஆனால் உண்மையில் இவ் விசாரணைக்குழுக்கள் அரச துருப்புக்களின் படுகொலைக்குக் காரணங்களே தேடின. ஆனால், இவை யாவற்றாலும் மறைக்க முடியாத அளவில் நிகழ்ந்த மயிலந்தனைப் படுகொலை அரசாங்கத்தின் விருப்பத்தை மீறியே நீதிமன்றம் வரை வந்து விட்டது.

இருப்பினும் இதில் சம்பந்தப்பட்ட சிப்பாய்களைப் பாதுகாக்கும் தனது நோக்கில் இருந்து அரசாங்கம் பின்வாங்கவில்லை, இந்நிலையில்தான் மயிலந்தனைப் படுகொலை விசாரணையை பொலநறுவை மாவட்டத்திற்கு மாற்றப்பட்டது. இம்மாற்றமானது, நீதிமன்றத்திற்கு சாட்சியங்களின் வரவை தடைசெய்து, விசாரணையை இடையில் முறித்து படுகொலைக்குக் காரணமானவர்களை விடுதலை செய்வதாகும்.

அரசாங்கத்தின் இக்குறிக்கோள் கடந்த மாதம் 26 ஆம் திகதி வழக்கு விசாரணை நீதிமன்றத்திற்கு

தடை நீக்கம் செய்யப்பட்ட பொருள்கள்

## வர்த்தமானி அறிவித்தல் படையினருக்கு தெரியாதாம்

(கொழும்பு)

பெற்றோல், மசகு எண்ணெய், யூரியா ஆகியவற்றின் மீதான தடை நீக்கப்பட்டது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்னமும் எமக்குக் கிடைக்கவில்லை. எனவே வடபகுதிக்கு அவற்றை எடுத்துச் செல்ல பாதுகாப்பு படையினர் எவரையும் அனுமதிக்க மாட்டார்கள் என கூட்டுப் படை தலைமையக தலைமைப் பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன கடந்த புதனன்று கிராமோதய மண்டபத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்

அப்போது பத்திரிகையாளர் கேட்ட மற்றுமொரு கேள்விக்கு பதிலளித்த புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா கூறுகையில், பெற்றோல், யூரியா போன்ற பொருள்கள் மீதான தடையை அகற்றும் வர்த்தமானி அறிவித்தல் வெளிவரப் போவதாக அறிந்தேன் என்று தெரிவித்தார்.

## அரசின் திறமையின்மையை இன்றைய நிலை காட்டுகிறது

காமினி திஸநாயக்க தெரிவிப்பு

'வடக்கு கிழக்கில் நிலைமை மோசமாகவுள்ளது. நாட்டின் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. இது திறமையற்ற ஆட்சியையே காட்டுகின்றது என காமினி திஸநாயக்கா குற்றஞ் சாட்டினார். கட்சியின் மாவட்ட அமைப்பாளர்களது கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசு ஜே. வி. பி, பயங்கரவாதத்தை நசுக்கியது. அதேபோன்று எதிர்க்கட்சிகளையும்நசுக்க அவ் அரசு முயன்றது. லலித் அத்துலத்முதலியின் கொலைவிசாரணை இன்னமும் முடிவடையவில்லை. விசாரணை முடிவை நாம் எதிர்பார்த்துக் காத்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 225 பாராளு. உறுப்பினர் நாட்டிற்குத் தேவையில்லை

— தொண்டா

(கொழும்பு)

நாட்டில் மாகாண சபை அமைப்பு முறை இருக்கும் போது மத்திய அரசிற்கு மிகப் பெரும் சுமையான 225 உறுப்பினர்கள் அவசியம் இல்லை என அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; 1947ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் 95 பிரதிநிதிகளும் 6 நியமன பிரதிநிதிகளுமாக 101 பேர் மட்டுமே இருந்தனர். அதே நிலைக்கு எண்ணிக்கை குறையவேண்டும். இதனைக் குறைக்க ஆளும் கட்சியே முயற்சிக்க வேண்டும் என்றார்.

## பொலிசாரின் நிர்ப்பந்தம்; அகதிகள் திரும்பினர்

(கொழும்பு)

பொலிசாரின் வற்புறுத்தலின் பேரிலேயே நாம் இங்கு வருவதற்காக வாகனத்தில் ஏறிக்கொண்டோம். எமக்கு இப்படியான சூழலில் வாழ விருப்பமே இல்லை. நிர்ப்பந்தத்திற்கு நாம் கட்டுப்பட்டோம். இவ்வாறு கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள் கூறியுள்ளனர்.

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியிலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் கடற்கரையோரமாக நாவலடி கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கும் தற்காலிக கிடுகுக் கொட்டில்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் இவர்களில் பலரும், புனானை எல்லை, ஏறாவூர் பகுதிகளை சேர்ந்தோர் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# போரில் வெற்றி பெறுவதற்கு படையில் ஒற்றுமை தேவை

### ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா

(கொழும்பு)

புலிகளுக்கு எதிராக போர் புரிந்துவரும் அரச படைகள் வெற்றி பெறவேண்டுமானால் படை அதிகாரிகள், மற்றும் சிப்பாய்கள் மத்தியில் நிலவும் போட்டி பொறாமைகள் களையப்பட்டு ஒற்றுமை உருவாக வேண்டும் என இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்தியரட்ணா ஆலோசனை கூறியுள்ளார்.

ஒழுக்கமின்றி நடக்கும் படையினர் எந்த தரத்தைச் சேர்ந்தவர்களாயினும் தண்டிக்கப்படுவர். அநுராதபுரத்தில் இராணுவத்திற்கு ஆசி வேண்டி நடைபெற்ற பௌத்த மத நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசியபோதே இராணுவத் தளபதி இவ்வாறு கூறினார்.

இதேபோன்று மற்றுமோர் பௌத்த நிகழ்ச்சி ஒன்று அண்மையில் கதிர்காமத்தில் நடத்தப்பட்டது. இந்த மத நிகழ்ச்சியில் வடக்கு கிழக்குப் போர் விரைவில் முடிவடைந்து நாட்டில் அமைதி, சமாதானம் நிலவவேண்டும் என மும்மணிகளின் ஆசியைவேண்டி வழிபாடுகள் நடத்தப்பட்டன. இந் நிகழ்வின் கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா, விமானப்படைத் தளபதி ஏர் வைஸ் மார்ஷல், ரெறன்ஸ் குணவர்த்தனா, கடற்படையின் சார்பில் கப்டன் சுராஜ் முனசிங்க ஆகியோர் பங்குபற்றினர்.

## கடந்த கால தலைவர்கள் ஏமாற்றியே வந்துள்ளனர்

திருமதி சந்திரிகா

(கொழும்பு)

சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்காமலும், அவர்களின் தேவைகளை நிறைவேற்றாமலும் பெரும்பாலான தலைவர்கள் ஏமாற்றியே வந்துள்ளனர் சிறுபான்மையினருக்கான நியாயபூர்வமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு மேல்மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

மத வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட அவர் அங்கு மேலும் கூறுகையில் சிறுபான்மையினரை ஒதுக்கி விடாது தேசிய இனம் என்ற உணர்வுடன் பெரும்பான்மையினர் அவர்களை அரவணைத்து நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்க முன்வர வேண்டும்.

அவ்வாறு பரந்த எண்ணத்துடன் பெரும்பான்மை இனத்தவர் செயற்படுவார்களேயானால் இன்று பூதாகரமாக எழுந்துள்ள பொருளாதார, இன, சமூகப் பிரச்சினைக மற்றும் மனித உரிமைப் பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வு காணப்படலாம் எனவும் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் சர்வோதயத் தலைவர் ஏ. ரி. ஆரியரத்தின, ஐ. ஐ தே. மு. தலைவர் காமினி திசாநாயக்கா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

பல்கலைக்கழக அனுமதிக்கு

## தகுதி படைத்தவர்களுக்கு திறந்தபல்கலையில் அனுமதி

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்கள் திறந்த பல்கலைக்கழகத்தில் கட்டணம் ஏதுமின்றி பட்டப்படிப்பு கற்கை நெறியை மேற்கொள்ள தற்போது சந்தர்ப்பம் உள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது 1990ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கு இது பொருந்தும். இவர்களுக்கான கற்கை கட்டணத்தை மானிய ஆணைக்குழுவே வழங்கும்.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மாணவர்கள் இயற்கை விஞ்ஞான பட்டப்படிப்பு, சட்டம் மற்றும் தொழில் நுட்ப கற்கை நெறிகளை தொடர முடியும் என திறந்த பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் தயானந்த விஜயசேகர தெரிவித்தார்.

காலத்திற்கு காலம் திறந்த பல்கலைக்கழகம் இது குறித்து விளம்பரப்படுத்தும் போது விண்ணப்பங்களை அனுப்பலாம் என்றும் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் மாணவர் தாம் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியை தொடர பூரண சம்மதம் தெரிவித்த கடிதம் ஒன்றையும் இணைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது. புதிய விஞ்ஞான கற்கைநெறி நவம்பரில் ஆரம்பமாகிறது. இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 10 ஆம் திகதி என தெரிவிக்கப்படுகிறது.

## க.பொ.த (உ/த) பரீட்சை ஆகஸ்ட் 2-ல் ஆரம்பம்

[கொழும்பு]

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெற இருக்கும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சுமார் ஓர் இலட்சத்து 53ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

இவற்றுள் பாடசாலைகள் மூலமாக தோற்றும் பரீட்சார்த்திகள் சுமார் ஓர் இலட்சத்து ஐயாயிரம் பேரும், தனிப்பட்ட முறையில் 48 ஆயிரம் பேரும் பரீட்சை எழுத விண்ணப்பித்துள்ளனர்.

மேற்படி பரீட்சைகள் ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி தொடங்கி 24ஆம் திகதி முடிவடையுமெனபரீட்சை ஆணையாளர் ஆ தர்வெதமுல்ல தெரிவித்துள்ளார். [பா]

## ஜனாதிபதி விஜயதுங்கா ஜனாதிபதி. மாளிகையில்

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்று இரண்டு மாதங்களின் பின்டி.பி. விஜயதுங்கா தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான ஜனாதிபதி மாளிகைக்கு கடந்த முதலாம் திகதி தலத்திற்கு சென்றுள்ளார்.

ஹேமா பிரேமதாசா வெளியேறியபின் ஜனாதிபதி மாளிகைக்கு மீண்டும் விசேட அதிரடிப்படையினர் தமது பாதுகாப்பை வழங்கி வருகின்றனர். ஜனாதிபதி பிரேமதாசா

# சிறிலங்கா ஜனாதிபதியிடம் அளவு கடந்த அதிகாரங்கள்

களைத் ஆரம்பித்தது. ஆனால் உண்மையில் இவ் விசாரணைக்குழுக்கள் அரச துருப்புக்களின் படுகொலைக்குக் காரணங்களே தேடின. ஆனால், இவை யாவற்றாலும் மறைக்க முடியாத அளவில் நிகழ்ந்த மயிலந்தனைப் படுகொலை அரசாங்கத்தின் விருப்பத்தை மீறியே நீதிமன்றம் வரை வந்து விட்டது.

இருப்பினும் இதில் சம்பந்தப்பட்ட சிப்பாய்களைப் பாதுகாக்கும் தனது நோக்கில் இருந்து அரசாங்கம் பின்வாங்கவில்லை. இந்நிலையில்தான் மயிலந்தனைப் படுகொலை விசாரணையை பொலநறுவை மாவட்டத்திற்கு மாற்றப்பட்டது. இம்மாற்றமானது, நீதிமன்றத்திற்கு சாட்சியங்களின் வரவை தடைசெய்து, விசாரணையை இடையில் முறித்து படுகொலைக்குக் காரணமானவர்களை விடுதலை செய்வதாகும்.

அரசாங்கத்தின் இக்குறிக்கோள் கடந்த மாதம் 26 ஆம் திகதி வழக்கு விசாரணை நீதிமன்றத்திற்கு எடுத்துக் கொண்ட போது ஓரளவு நிறைவேறியது. மொத்தம் 46 சாட்சியங்களில், ஒரு சாட்சியம் கூட பொலநறுவை நீதிமன்றத்தில் சமூகம் அளிக்கவில்லை. இறுதியில் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டதோடு 10 சாட்சியங்கள் மீது பிடிவிறாந்தும் விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இது எதிர்பாராத ஒன்றல்ல. மட்டக்களப்பு நீதிமன்றத்தில் இருந்து பொலநறுவை நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டபோதே எதிர்பார்க்கப்பட்டதொன்றுதான். இது குறித்து அப்பொழுதே எச்சரிக்கப்பட்டதோடு, மட்டக்களப்பிலேயே நடத்துமாறு கோரப்பட்டும் இருந்தது.

பொலநறுவை நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றப்பட்டதென்பது சிறிலங்கா நீதி பரிபாலன முறைக்கு விரோதமானதாகும். மயிலந்தனை கிராமமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிராமமாகும். ஆகவே, ஆரம்ப விசாரணைகள் மட்டக்களப்பு நீதிமன்றங்களிலேயே நடத்தப்பட வேண்டும். அடுத்ததாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து பொலநறுவைக்கு பயணம் செய்வது என்பது இலகுவானதும், பாதுகாப்பானதும் அல்ல. மேலும், சாட்சியங்கள் யாவும், அகதிமுகாம்களில் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்வதால், போக்குவரத்திற்குத் தேவையான பணவசதி கூட அவர்களிடம் கிடையாது.

இவையாவற்றிற்கும் மேலாகசாட்சியம் அளிக்க பொலநறுவை செல்லும் எவருக்கும் உயிர் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் கிடையாது. சிங்கள இராணுவத்தினராலும், காடையர்களாலும், படுகொலையுடன் சம்பந்தப்பட்ட உறவினர்களினாலும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்களில் இருந்து தப்பித்துக் கொள்வது சுலபமான காரியமல்ல. இவர்களிடம் இருந்து பாதுகாப்பை எந்த சிங்கள ஆயுதப்படையும் வழங்கப்போவதில்லை.

இந்நிலையில் நீதியை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகக் கூறிக்கொள்வது வெறும் கண்துடைப்பு. உலகத்தை ஏமாற்றும்நடவடிக்கை. உண்மையிலேயே அரசாங்கம் நீதியை நிலைநாட்ட விரும்பின் தனது பூரண கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறிக்கொள்ளும் மட்டக்களப்பு நகரிலேயே விசாரணையை நடத்தலாமே. ஏன் தயங்குகிறது?

## அகதிகள் திரும்பினர்

(கொழும்பு)

பொலிசாரின் வற்புறுத்தலின் பேரிலேயே நாம் இங்கு வருவதற்காக வாகனத்தில் ஏறிக்கொண்டோம். எமக்கு இப்படியான சூழலில் வாழ விருப்பமே இல்லை. நிர்ப்பந்தத்திற்கு நாம் கட்டுப்பட்டோம். இவ்வாறு கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு கொண்டு செல்லப்பட்ட தமிழர்கள் கூறியுள்ளனர்.

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியிலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் கடற்கரையோரமாக நாவலடி கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கும் தற்காலிக கிடுகுக் கொட்டில்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் இவர்களில் பலரும், புனானை எல்லை, ஏறாவூர் பகுதிகளை சேர்ந்தோர் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெற்ற மாணவர்களுக்கு இது பொருந்தும். இவர்களுக்கான கற்கை கட்டணத்தை மானிய ஆணைக்குழுவே வழங்கும்.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மாணவர்கள் இயற்கை விஞ்ஞான பட்டப்படிப்பு, சட்டம் மற்றும் தொழில் நுட்ப கற்கை நெறிகளை தொடர முடியும் என திறந்த பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் தயானந்த விஜய சேகர தெரிவித்தார்.

காலத்திற்கு காலம் திறந்த பல்கலைக்கழகம் இது குறித்து விளம்பரப்படுத்தும் போது

# சிறிலங்கா ஜனாதிபதியிடம் அளவு கடந்த அதிகாரங்கள்

## பேராசிரியர் ஜேம்ஸ் பீரிஸ்

(கொழும்பு)

பிரெஞ்சு ஜனாதிபதிக்கு கூட பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இல்லை. உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி எனக் கூறப்படும் அமெரிக்க ஜனாதிபதிக்கு கூட காங்கிரசைக் கலைக்கும் அதிகாரம் கிடையாது. ஆனால் சிறிலங்காவின் ஜனாதிபதிக்கு அரசியலமைப்பு அத்தகைய அதிகாரங்களைக் கூட வழங்கி இருக்கிறது.

இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கருத்து வெளியிட்டுள்ளார்.

மாகாணசபைத் தேர்தலில் வென்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்;

''நாட்டின் அதிஉயர் சட்ட ஆக்க சபையான பாராளுமன்றத்திற்கு நிறைவேற்று அதிகார பீடத்தை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரங்களை கொண்டிருக்க வேண்டும். ஆனால் அத்தகைய கட்டுப்பாடு சிறிலங்காவின் இப்போதைய அரசியலமைப்பின் கீழ் இல்லை. பாராளுமன்றத்தின் அதிகாரங்களை வலுவிழக்கச் செய்வதற்கான அதிகாரங்களை அரசியலமைப்பு ஜனாதிபதிக்கு வழங்குகின்றது. அரசியலமைப்பின் படி கட்சியில் இருந்து நீக்கப்படுமிடத்து உறுப்பினர் ஒருவர் பாராளுமன்ற ஆசனத்தையும் இழக்க வேண்டியவராக உள்ளார். இதனால் கட்சியின் வழியில் செயல்பட வேண்டிய கடப்பாட்டிற்கு உறுப்பினர் உள்ளாகின்றார். அத்துடன் அமைச்சரவை உறுப்பினர்களாக இல்லாத இராஜாங்க அமைச்சர்கள், கருத்திட்ட அமைச்சர்கள் போன்றோர் பெருமளவில் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருப்பதும் பாராளுமன்றத்தின் சுதந்திரத்திற்கு குந்தகமாகவே அமைகின்றது.

ஜேர்மன் அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றத்தின் சகல உறுப்பினர்களும் தமது மனச்சாட்சிப்படி செயற்பட உரித்துடையவர்கள். பிரான்சு அரசியலமைப்பின் கீழ் அமைச்சர் பதவிக்கு நியமனம் பெறுபவர் பாராளுமன்ற ஆசனத்தை துறக்க வேண்டியவர் ஆகின்றார். சுவீடனில் அமைச்சர்களுக்கு பாராளுமன்றத்தில் வாக்களிக்கும் உரிமை இல்லை. இவையெல்லாம் பாராளுமன்றத்தின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் ஆகும்.

எனவே தற்போதைய குறைபாடுகள் நீக்கப்படாமல், பாராளுமன்ற உறுப்பினர்களின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படாமல் வெறுமனே முன்னைய வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன்ற முறைக்கு திரும்புவதில் அர்த்தமில்லை'' எனவும் அவர் தெரிவித்தார்.

## சந்திரசேகரனை விடுவிக்க நாடெங்கும் பிரசாரம்

### எதிரணி நடவடிக்கை

(கொழும்பு)

அவசரகால சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரனை விடுதலை செய்ய வேண்டும் எனக்கோரி எதிர்க்கட்சிகள் நாடெங்கிலும் பிரசாரங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளன.

அண்மையில் கொழும்பில் கூடிய ஒன்பது எதிர்க்கட்சிகள் இதற்கான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளன.

தடுப்புக்காவலில் இருந்தவாறே மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெற்ற மாகாண சபையில் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக அவர் மீதான தடுப்புக்காவல் உத்தரவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் புதுப்பிக்கக் கூடாது எனவும் எதிரணிகள் கோரிக்கை விடுக்கவுள்ளன.

இதேவேளை சப்பிரகமுவா மாகாண சபைக்கு தெரிவான வரும், இராஜாங்க அமைச்சர் ஒருவரின் கணவருமான ஒருவர் கொலைக் குற்றச்சாட்டின் கீழ் தடுத்து வைக்கப்பட்டதில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார் என்றும், சந்திரசேகரனையும் அவ்வாறு விட மறுப்பது அரசியல் பழிவாங்கலே என்றும் சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தர்ம சிறி சேனநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

## படையினர் மூவர் கைது

(கொழும்பு)

தனியார் நிறுவனம் ஒன்றிற்காக சம்பத் வங்கியிலிருந்து பணம் எடுத்துச் செல்லப்படுகையில் அதுகொள்ளையடிக்கப் பட்டது தொடர்பாக மூன்று பாதுகாப்புப் படையினர் உட்பட ஐவர் அத்துருகிரிய பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## க.பொ.த (உ/த) பரீட்சை ஆகஸ்ட் 2-ல் ஆரம்பம்

[கொழும்பு]

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெற இருக்கும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சுமார் ஓர் இலட்சத்து 53ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

இவற்றுள் பாடசாலைகள் மூலமாக தோற்றும் பரீட்சார்த்திகள் சுமார் ஓர் இலட்சத்து ஐயாயிரம் பேரும், தனிப்பட்ட முறையில் 48 ஆயிரம் பேரும் பரீட்சை எழுத விண்ணப்பித்துள்ளனர்.

மேற்படி பரீட்சைகள் ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி தொடங்கி 24ஆம் திகதி முடிவடையுமெனபரீட்சை ஆணையாளர் ஆ தர்வெதமுல்ல தெரிவித்துள்ளார். [பா]

## ஜனாதிபதி விஜயதுங்கா ஜனாதிபதி மாளிகையில்

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்று இரண்டு மாதங்களின் பின் டி.பி. விஜயதுங்கா தனது உத்தியோக பூர்வ வாசஸ்தலமான ஜனாதிபதி மாளிகைக்கு கடந்த முதலாம்திகதி சென்று குடியேறினார்.

கடந்த மாத இறுதியில் இதுவரை ஜனாதிபதி மாளிகையில் தங்கியிருந்த திருமதி ஹேமா பிரேமதாசா தனது புதிய வீட்டிற்கு இடம் பெயர்ந்ததைத் தொடர்ந்தே ஜனாதிபதி விஜயதுங்கா தனது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திற்கு சென்றுள்ளார்.

ஹேமா பிரேமதாசா வெளியேறியபின் ஜனாதிபதி மாளிகைக்கு மீண்டும் விசேட அதிரடிப்படையினர் தமது பாதுகாப்பை வழங்கி வருகின்றனர். ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட பின்னர் அவரது குடும்பத்தினருக்கு விசேட அதிரடிப்படை பாதுகாப்பு தேவையில்லை என அரசு எடுத்த முடிவை அடுத்து முன்னதாக அங்கிருந்து அதிரடிப்படையினர் வாபஸ் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சரவைபரிசீலனையில் நாடுகடத்தல் மசோதா

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளை மாற்றம் செய்வதற்கான நகல் மசோதாவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

பொதுநலவாய நாடொன்றின் பிரஜை ஒருவர் இலங்கையில் குற்றம் புரிந்ததற்காக தண்டிக்கப்பட்டால் அவரை அந்நாட்டின் வேண்டுகோளின் பேரில் அவரது சொந்த நாட்டிற்கு நாடுகடத்த இம் மசோதா வழிவகுக்கின்றது.

பொதுநலவாய நாடொன்றில் குற்றம் புரிந்ததற்காக தண்டிக்கப்பட்ட இலங்கையர் ஒருவரை இலங்கை அரசு வேண்டுகோளின் பேரில் இலங்கைக்கு நாடு கடத்தவும் இந்த மசோதா வழிவகுக்கின்றது.

## உறவினரைப் பிரிந்த கொழும்பு அகதிகள்

கொழும்பில் அகதிமுகாம்களிலிருந்த தமிழர்களை மட்டக்களப்பிற்கு பலவந்தமாக ஏற்றி வந்தபோது பலர் குடும்பங்களை பிரிந்து வரவேண்டி ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து ஏற்றிவரப்பட்டு நாவலடி அகதிமுகாமில் இறக்கி விடப்பட்ட பெண் ஒருவர் தனது தந்தையை கொழும்பில் கைவிட்டு வர வேண்டிய நிலை ஏற்பட்டதாக முறையீட்டுள்ளார். மற்றொரு வாலிபர் தனது வயதான பெற்றோரை கொழும்பில் கைவிட்டு விட்டு வர வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் அவர்களை தம்மிடம் சேர்ப்பிக்கும்படியும் கேட்டுள்ளார்.

## மக்களின் இன்றைய தேவை கௌரவமான சமுதாயமே

### திருமதி சிறிமா பண்டாரநாயக்கா

(கொழும்பு)

கௌரவத்துடனான ஒரு சமுதாயமே மக்களின் இன்றைய தேவை ஆகும். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவருமான திருமதி சிறிமா பண்டார நாயக்க கூறியுள்ளார்.

அளுத்கம திறந்தவெளியரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் எதிர்காலத்தில் தாம் அமைக்க இருக்கும் அரசாங்கத்தின் முன்னுரிமைகளில் ஒன்றாக இது இருக்கும் எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
வெளிவாரிப்
பட்டப் படிப்புகள்
1993 AUG - பிட்டல்; வினா விடை வகுப்பு
பொருளியல்
S. வரதராஜன் B A/Hons

1st in ARTS | B.A
1st in COM | B.COM
PART 1

❋ பொருளியற் தத்துவங்கள்
❋ இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு
❋ MICRO ECONOMICS
❋ MACRO ECONOMICS

ஆரம்பம் 10-07-93
சனி பிற்பகல் 5.15

ஆரம்பம் 11 07-93
ஞாயிறு பிற்பகல் 3.30

★ அச்சிடப்பட்ட வினா விடைக் குறிப்புகள் வழங்கப்படும்.
★ முன் கூட்டியே பெயர்களைப் பதிவு செய்து வினா விடைக் குறிப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும்.

பாரதிதாசன்
கல்வி நிறுவனம் (BECON)
ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். (சி-6964)

தொழினுட்பக்கல்லூரி
**இறுதிப் பரீட்சை-1992**

உயர் கணக்கியல் தகுதித் தேர்வு புதிய பாடத் திட்ட 3ஆம் ஆண்டுப் பரீட்சை 1993.07.12-ம் திகதி ஆரம்பிக்கவிருப்பதால், தேர்வு நாடிகள் 1993.07.11-ம் திகதி மு. ப. 9. 00 மணிக்கு தமது மாணவர் பிரவேச அனுமதிச் சிட்டைச் சமர்ப்பித்துப் பரீட்சைக்குரிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

தொழினுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1993-07-06

அதிபர்.
(சி-6967)

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்
NIGHT HAWKS
(இரவுப் பருந்துகள்)
(தமிழ் விளக்கம்)
தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி.

## மாவட்ட மட்ட வலைபந்தாட்ட போட்டி

யாழ் மாவட்ட வலைபந்தாட்ட மாவட்ட நிலைச் சுற்றுப்போட்டிகளின் இன்றைய நிகழ்ச்சிகள் மாலை 3மணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாக உள்ளன.

இன்று 17 வயது பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரியை எதிர்த்து கனகரத்தினம் மகா வித்தியாலயமும், இளவாலை மெய்கண்டானை எதிர்த்து கன்னியர்மடம் தமிழ் மகா வித்தியாலயமும், 19 வயது பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும் விளையாடும்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் 3 மணிக்கு ஆரம்பமாகும் வலைபந்தாட்டப் போட்டியில் 17 வயது பிரிவில் சண்டிலிப்பாய் இந்து ம வித்தியாலயத்தை எதிர்த்து சாவகச்சேரி றிபேக் கல்லூரியும் 19 வயது பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியை எதிர்த்து சாவகச்சேரி றிபேக் கல்லூரியும், மகாஜனாக் கல்லூரியை எதிர்த்து இராமநாதன் கல்லூரியும் விளையாடும்.

## சயம்பு தின விழா

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய 105-வது ஆண்டு நிறைவையொட்டிய சயம்பு தின விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ் ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் பிறபகல் 2 மணி தொடக்கம் கொத்தணி அதிபர் திரு. செ. தேவதாசன் தலைமையில் நடைபெறும்.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. அருளானந்தம் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளுவார்.

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரின் மத்தியில் சுவையருவுக்கு முன்பாக நேற்றுக்காலை நடந்த லொறி-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் காயமடைந்தார்.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள், லொறியின் சில்லினுள் அகப்பட்டதில் முற்றாக சேதமடைந்தது. அதை ஓட்டிவந்தவர் பாய்ந்து உயிர் தப்பினார். (சி)

## ஆகஸ்ட் 18 இல் பரீட்சை ஆரம்பம்

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழக முதலாவது கலை விஞ்ஞான (வெளிவாரி) மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகும் என பேராதனைப் பல்கலைக்கழக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகள் பண்டாரவளை, கொழும்பு, குருநாகல், மாத்தறை, பேராதனை ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும் எனவும், இதுதொடர்பான விபரங்கள் பரீட்சார்த்திகளுக்கு விரைவில் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தவறாது கலந்து கொள்ளவும்

வவுனியா மாவட்ட பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் இன்று மாலை 4.30 மணியளவில் குளப்பிட்டிச் சந்தியில் அமைந்துள்ள மாணவ கல்வி நடுவப்பணியகத்திற்கு முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாட தவறாது வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தில்

சட்டவிரோதமாக ஜேர்மன் செல்வோர்

## விமான நிலையத்தில்வைத்து விசாரிக்க முடிவு

(பொன்)

ஜேர்மனியில் அரசியல்தஞ்ச உரிமைகள் தொடர்பான மிகவும் கடுமையான புதிய கட்டுப்பாடுகள் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளன. அகதிகளாக வருபவர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிக்கும்வரை அகதிகளை தங்க வைக்க ஜேர்மன் விமான நிலையங்களில் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தரைமார்க்கமாக வரும் அகதிகள் எண்ணிக்கை குறையும் என எதிர்பார்க்கும் அதிகாரிகள், விமானங்கள் மூலம அகதிகள் வரலாம் என்பதாலேயே விமான நிலையங்களில் அகதிகளை தங்க வைக்க அங்கு விடுதிகளை அமைத்து வருகின்றனர்

சர்வசன

இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். அம்பாறை மாவட்டத்தில் தற்போது சர்வசன வாக்கெடுப்பு நடத்தக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களில் 3-5 மாதங்களில் உருவாக்கப்பட முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

சர்வதேச

னாலும், சொல்லாவிட்டாலும் இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட அப்பாவிகளின் நம்பிக்கையை சர்வதேச செஞ்சிலுவைக்குழு இழந்துவிட்டது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையில் நேர்மையான தரகர்களாகவும், மத்தியஸ்தர்களாகவும் தலையைப் போட்டுள்ள மேற்கு நாடுகளைச் சேர்ந்த நலன் விரும்பிகளையும், அரச சார்பற்ற மனிதநேய அமைப்புகளையும நாம் சந்தேகக் கண் கொண்டே பார்க்க வேண்டியுள்ளது. பிரச்சினை பற்றித் தெரிந்துகொள்ள வெளிநாட்டுப்பத்திரிகையாளர் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவையே நம்பயிருந்தனர். இது கன்னனின் மறைவிடத்தை அவனின் தாயாரிடம்கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு ஒப்பான செயலாகும் என்றும்,

சர்வதேச செஞ்சிலுவைக் குழு ஒரு நேர்மையான தரகர் என்ற நிலையில் இருந்து தவறிவிட்டது அத்துடன் அது அதன்நம்பகத் தன்மையையும் இழந்து விட்டது. இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப் போகிறோம் என்று மனிதநேய சேவையில் ஈடுபடும் அமைப்புகளின் சட்டைப் பைக்குள் புலிகள் புகுந்துள்ளார்களா என்பதை இனிக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக் குழுவிற்கும் யாழ் பல்கலைக் கழகத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை எனவும் அவ்வாறு ஒரு குழு இங்கு இல்லை எனவும் யாழ். பல்கலைக்கழகம் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்கள்

## காஞ்சிரன்காடு மோதலில் வீரச்சாவடைந்தோர்


லெப் செந்தில்


லெப கஜதீஸ்வரன் (நிலான்)


2-ம லெப். விஜயநாதன் (விஜி)


2-ம் லெப். உமாரமணன் (லோகிதன்)


2 ம லெப். சிவனேந்திரன் (பிரதீபன்)


வீரவேங்கை பாலசிங்கம் (சௌந்தர்ராஜன்)

கைதிகள்

இதனிடையே யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து காவலில் உள்ள யுத்தக்கைதிகளின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஆதரவில் விடுதிபோன்று அமைக்கப்பட்ட ஓர் இடத்தில் தொடர்ந்து தங்கியிருப்பதாக பி.பி.ஸி மேலும் தெரி

## மெய்வன்மைப்போட்டி

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்திபாசாலையின் இல்லங்களின் மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப. 1.30மணிக்கு அதிபர் திரு. க. பழனிவேற்பிள்ளை தலைமையில் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதா

கொள்ளவும்.

தொழினுட்பக்கல்லூரி, அதிபர்.
யாழ்ப்பாணம்.
1993-07-06 (சி-6967)


யாழ் நகர் ஸ்ரீதர் திரை யரங்கில்

NIGHT HAWKS

(இரவுப் பருந்துகள்)

(தமிழ் விளக்கம்)

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி

(சி-6959)



## தேவை

தமிழாக்கம் செய்யப்பட்ட பொது, விஞ்ஞான அறிவியல் விடயங்களையும், வீடியோ திரைப்படங்களையும் ஒப்பிட்டு சரிபார்க்க வேண்டும். ஆங்கில, தமிழ்மொழி ஆற்றல் உள்ள ஆண்கள் விண்ணப்பிக்கவும். பாடசாலை, பல்கலைக்கழககல்வி முடித்தோர்விரும்பத்தக்கது.

15-07-93 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 194,
c/o ஈழநாதம்
31, மகேந்திரா வீதி. யாழ்ப்பாணம். [5297]


அனுப்பிவைக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### தவறாது கலந்து கொள்ளவும்

வவுனியா மாவட்ட பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் இன்று மாலை 4.30 மணியளவில் குளப்பிட்டிச் சந்தியில் அமைந்துள்ள மாணவ கல்வி நடுவப்பணியகத்திற்கு முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாட தவறாது வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தில் பெற்றோர் தின "பரிசளிப்பு விழா- 1993" இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு யாழ் வைத்தீஸ்வரக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### கரும்புலிகள்

டிருக்கிறது. அதேபோல் கடலிலே கலந்து கொண்ட கரும்புலிகளின் உயிரும் அலையோடு கரைமோதி விடுதலை, விடுதலை என உரக்க முரசுகொட்டச் செய்கிறது என்றார்.

இதனைத் தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்தப் பிரச்சினையில் நேர்மையான தரகர்களாகவும், மத்தியஸ்தர்களாகவும் தலையைப் போட்டுள்ள மேற்கு நாடுகளைச் சேர்ந்த நலன் விரும்பிகளையும். அரச சார்பற்ற மனிதநேய அமைப்புகளையும நாம் சந்தேகக் கண் கொண்டே பார்க்க வேண்டியுள்ளது. பிரச்சினை பற்றித் தெரிந்துகொள்ள வெளிநாட்டுப்பத்திரிகையாளர் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவையே நம்பயிருந்தனர். இது கன்னனின் மறைவிடத்தை அவனின் தாயாரிடம்கேட்டுத் தெரிந்து சேவையில் ஈடுபடும் அமைப்புகளின் சட்டைப் பைக்குள் புலிகள் புகுந்துள்ளார்களா என்பதை இனிக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக் குழுவிற்கும் யாழ் பல்கலைக் கழகத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை எனவும் அவ்வாறு ஒரு குழு இங்கு இல்லை எனவும் யாழ். பல்கலைக்கழகம் ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்கள்

## அப்புத்துரை செல்லத்துரை

சிவன் கோயிலடி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் அப்புத்துரை செல்லத்துரை 5 07-93 திங்கள் இரவு காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இடம் பெற்று தகனக்கிரியைகள் வழுக்கையாறு பொது மயானத்தில் 6-7-93 பிற்பகல் 4.00 மணி அளவில் இடம் பெற்றது என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவர்கட்கும் ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றோம்.


தகவல்:
(5289) மனைவி, மக்கள்.

திருமதி
## பரமேஸ்வரி மாணிக்கம்
(பராசக்தி)

புங்குடுதீவு 9-ம் வட்டாரத்தை பிறப்பிடமாக கொண்டவரும் தற்பொழுது ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி மாணிக்கம் (பராசக்தி) அவர்கள் 6-7-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மருதானை பழக்கடை மாணிக்கம் அவர்களின் அன்பு மனைவியும், பத்மாவதி, பவளம், மகேஸ்வரி தியாகராஜா (சட்டத்தரணி ஆனைக் கோட்டை) மணிவாசகம மாயாவதி தங்கேஸ்வரன் (K. M. T. ஸ்ரோர்ஸ் மருதானை), காலஞ்சென்ற வரலெட்சுமி, காலஞ்சென்ற சடாச்சரதேவி பேரின்ப மூர்த்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற செ. குணரத்தினம் (புவனேஸ்வரி ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ்) ந.பொன்னையா (முன்னாள் இந்தியன் ஓவசீஸ்வங்கி உத்தியோகத்தர்), க சோமசேகரம்பிள்ளை (ஓய்வுபெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசன இலாகா), இ.இராசலிங்கம் விமல் சன்ஸ். மாயா ரேடிங்கிங் கொம்பனி ஆட்டுப்பட்டித் தெரு கொழும்பு), இரதி (தேசியசேமிப்பு வங்கி யாழ்ப்பாணம்) சிவகாமசுந்தரி, தவமணிதேவி, வாசுகி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் (7-7-93) இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு தகனக் கிரியைக்காக கரையாம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
"துளசி" மா. தியாகராஜா
வினோத் வீதி, (மகன்)
ஆனைக்கோட்டை. (5298)



2 ம லெப். சிவனேந்திரன்
(பிரதீபன்)



வீரவேங்கை பாலசிங்கம்
(சௌந்தர்ராஜன்)

### கைதிகள்

இதனிடையே யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து காவலில் உள்ள யுத்தக்கைதிகளின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஆதரவில் விடுதிபோன்று அமைக்கப்பட்ட ஓர் இடத்தில் தொடர்ந்து தங்கியிருப்பதாக பி.பி.ஸி மேலும் தெரிவித்தது.

### யுத்தக்

அமைச்சர் விமல் விக்கிரமசிங்க தொடர்ந்து பதிலளிக்கையில் குறிப்பிட்டார். பருத்தித் துறையில் கப்பலில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த வேளை அவற்றை மீண்டும் செஞ்சிலுவைச் சங்கமே கப்பலில ஏற்றி காங்கேசன் துறைக்கு பாதுகாப்பாக அனுப்பி வைத்தது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### புகையிரத

யூடாகச் சென்ற பயணிகளை சிறிய பாலத்தடியிலுள்ள சிறிலங்கா இராணுவக் காவலரணில் வைத்து சோதனையிட்ட பின் நகர் செல்ல அனுமதித்தனர்.

இதேவேளை காலை முதல் மாலைவரை இடையிடையே நொச்சிமோட்டையிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம்செய்த வண்ணம் இருந்தனர்.

### மெய்வன்மைப்போட்டி

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையின் இல்லங்களின் மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப. 1.30மணிக்கு அதிபர் திரு. க. பழனிவேற்பிள்ளை தலைமையில் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

### றுதுணு

இறங்கிய பின்னர் அது கொழும்புநோக்கிப் புறப்படும் எனவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பதுங்கியிருந்த

★ 2 ஆம் லெப்டினன்ட் சிவனேந்திரன் / பிரதீபன் (விஜயரத்தினம் ரமேஷ்குமார், கல்லடி மட்டக்களப்பு)

★ வீரவேங்கை பாலசிங்கம்/ சௌந்தர்ராஜன் (மகாலிங்கம் யோகராஜா, கண்டணகிபுரம் வாழைச்சேனை)

ஆகிய போராளிகளே வீரச்சாவு அடைந்தவர்களாவர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 06-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10224

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-9325, 26-5870, 43-1019, 42-9220, 26-5962
41-9175, 42-0526, 42-2397, 26-4429, 24-7672
26-9703, 26 9658, 24-7327, 26-0495, 26-5113
26-4579, 42-3114, 24-9645, 41-9165, 28-2464
24 4636, 26-4443, 41-9997, 28-6853, 40-1617
26-6320, 24-5137, 26-7217, 26-3294, 27-2056
28-9449.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-4255, 26-6628, 22-3379, 26-4450, 40-2677
26-4691 27-9771, 28-4354, 24-5460, 27-5823,
26-1349, 26-6640.


உ
சிவமயம்

# சைவமகாநாடு

(புண்ணியநாச்சி தரும அறக்கட்டளை)

இடம் : நாவலர் ஆச்சிரம மண்டபம்
நீராவியடி - யாழ்ப்பாணம்

காலம் : 9, 10, 11 யூலை 1993
வெள்ளி, சனி, ஞாயிறு

நேரம் : தினமும் மு.ப. 8.45 - 12.30மணி
பி. ப. 3.00 - 6.00 மணி

சைவ அறிஞர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்,
ஆசிரியகலாசாலை விரவுரையாளர்கள் - ஆசிரியமாணவர்கள்,
கல்லூரி ஆசிரியர்கள் - மாணவர்கள்,
கருத்துரை வழங்குவார்கள்.
சைவாபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

யாழ்ப்பாணம்.
(5295) சைவபரிபாலனசபை



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆடு இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 07-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.